முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2017 யூலை

## (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2017-07-16
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

- **அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களுக்குத்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணைகள்*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## <u>பிரிவு A</u>

இந்தப் பிரிவிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

தனிப்பட்ட நிதியானது (Personal finance) ஒரு நபரின் அல்லது ஒரு குடும்ப அலகின் நிதிசார்ந்த தீர்மானங்களுக்கு நிதியியற் தத்துவங்களைப் பிரயோகித்தல் ஆகும். தனிப்பட்ட நிதியின் அடிப்படையான விடயம் நிதிசார்ந்த ஊடுசெயல்களின் பதிவுகளைப் பேணுதலாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) தனிப்பட்ட நிதிக்கான பதிவுகளைப் பேணுதலின் அனுகூலங்கள் மூன்றினை (03) **நிரற்படுத்துக.**
(03 புள்ளிகள்)

(b) நிதிசார்ந்த சுயாதீனத்தை அடையும் இரண்டு (02) வழிகள் **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட பொப் கம்பனி** இரண்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி **பொருள் X** இனை உற்பத்தி செய்கின்றது. அதன் நியமக் கிரய அட்டையிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன :

| விபரம் | அலகொன்றிற்கு ரூ. |
|---|---|
| நேர்பொருள் **A** - 2 கி.கிராம் @ ரூ. 400/ கி.கிராம் | 800 |
| நேர்பொருள் **B** - 3 கி.கிராம் @ ரூ.150/ கி.கிராம் | 450 |

2017 யூன் மாதத்தில் **வ/ப பொப் கம்பனி** 10,000 அலகுகளை உற்பத்திசெய்து விற்பனை செய்ததுடன் அதற்கு நேர்பொருள் **A** யில் 22,000 கி.கிராமும் நேர்பொருள் **B** யில் 28,000 கி.கிராமும் பயன்படுத்தப் பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நேர்பொருட கலவை முரணை (Direct Material Mix Variance) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரைவுள்ள இனெக்ஸ் கம்பனி பொருள் NX** எனும் புதிய பொருள் ஒன்றினை உற்பத்திசெய்யத் திட்டமிட்டுள்ளது. எனினும், முதலாவது ஆண்டில் **பொருள் NX** க்கான சரியான கேள்வி மற்றும் கிரயம் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறது.

முதலாவது ஆண்டில் **பொருள் NX** க்கான அதிக சாத்தியமான கேள்வி 20,000 அலகுகளாகவும் அதிகபக்க மாற்றம் 50% ஆகவும் குறைந்தபக்க மாற்றம் 25% ஆகவும் இருக்குமென விற்பனை முகாமையாளர் எதிர்பார்க்கிறார். கம்பனியானது **பொருள் NX** இனை அலகொன்று ரூ. 150/- நிலையான விலையில் அறிமுகப்படுத்த எண்ணுகிறது.

அதிக சாத்தியமான மாறும் கிரயம் அலகொன்றுக்கு ரூ. 80/- ஆகும். எனினும் கேள்வியில் மாற்றத்திற்கு அமைய அலகொன்றின் மாறும் கிரயம் ரூ. 70/- இலிருந்து ரூ. 100/- வரையில் மாறுபடக்கூடும். நிலையான கிரயம் ஆண்டிற்கு ரூ. 240,000/- ஆக எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**பொருள் NX** இனை அறிமுகப்படுத்திய பின்னர் முதலாவது ஆண்டில் அந்த உற்பத்திப் பொருளுக்கான மூன்று அடுக்குப் பாதீட்டினை (three tier budget) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **அல்பா PLC** யின் 2017 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன :

*(ரூ.'000)*

| | **2017 மார்ச் 31** | **2016 மார்ச் 31** |
|---|---|---|
| வியாபார வருமதிகள் | 3,107 | 4,816 |
| வியாபார சென்மதிகள் | 4,137 | 3,803 |
| விற்பனை | 35,850 | 30,902 |
| கொள்வனவு | 21,711 | 19,800 |

2017 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான தொக்கிருப்புக் காலம் (Inventory residence period) முறையே 53 நாட்கள் மற்றும் 50 நாட்கள்.

*(ஒரு ஆண்டில் 365 நாட்களெனவும் விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் எல்லாம் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகவும் கொள்க)*

**நீங்கள் செய்யவேண்டியது :**

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்படு மூலதன சுழற்சிக் காலத்தை (working capital cycle) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட சோன் கம்பனி** அடுத்த ஆண்டில் அறிமுகப்படுத்துவதற்காக மூன்று புதிய பயணப்பொதிகளை (travel packages) மதிப்பாய்வு செய்கிறது. இந்தப் பொதிகளுக்கான கேள்வி அதிகளவில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தங்கியுள்ளது. வேறுபட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை மட்டங்களில் மூன்று பொதிகளினதும் எதிர்பார்க்கப்படும் இலாபங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| சுற்றுலாப் பயணிகள் வருகை மட்டம் | ஆண்டிற்கான இலாபம் (ரூ.) | | |
|---|---|---|---|
| | பொதி A | பொதி B | பொதி C |
| குறைந்த மட்டம் | 3,500,000 | 4,000,000 | 3,200,000 |
| சராசரி மட்டம் | 5,000,000 | 6,500,000 | 4,000,000 |
| உயர்ந்த மட்டம் | 10,000,000 | 7,500,000 | 11,000,000 |

தொழிற்றுறைசார்ந்த வல்லுநர்கள் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் நிகழ்தகவினை கீழ்வருமாறு எதிர்வு கூறியுள்ளார் :

| | நிகழ்தகவு |
|---|---|
| குறைந்த மட்டம் | 0.1 |
| சராசரி மட்டம் | 0.5 |
| உயர்ந்த மட்டம் | 0.4 |

தொழிற்பாட்டு மற்றும் நிதியளிப்பு வரையறைகள் காரணமாக **வ/ப சோன் கம்பனி** ஒரு பொதியினை மட்டுமே அறிமுகப்படுத்தக்கூடியதாக உள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்பாக சரியான தகவல்களை (perfect information) தெரிந்துகொள்வதற்காக ஆராய்ச்சிக் கம்பனியொன்றின் சேவைகளைப் பெறுமாறு **வ/ப சோன் கம்பனியின்** முகாமைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) சரியான தகவல்கள் இல்லாது எதிர்பார்ப்புப் பெறுமதிகளின் (expected value) அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய பொதியினை **இனங்காண்க.** (07 புள்ளிகள்)

(b) ஆராய்ச்சிக் கம்பனியின் சேவைகளுக்கு செலுத்தக்கூடிய உயர்ந்தபட்சத் தொகையை **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வ/ப PX கம்பனியானது பொருள் Q** வினை உற்பத்திசெய்து விற்பனை செய்கிறது. கம்பனியின் ஏடுகளிலிருந்து 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன. அலகொன்றின் விற்பனை விலை மற்றும் நியமக் கிரயங்கள் கீழ்வருமாறு :

| | ரூ. (அலகொன்று) | |
|---|---|---|
| விற்பனை விலை | | 810 |
| **மாறும் கிரயம் :** | | |
| நேர்பொருள் (5 கி.கிராம் @ ரூ. 80/கி.கிராம்) | 400 | |
| நேர்கூலி (0.6 மணித்தியாலம் @ ரூ. 250/ மணித்தியாலம்) | 150 | |
| மாறும் மேந்தலைகள் (0.6 மணித்தியாலம் @ ரூ.140/மணித்தியாலம்) | 84 | 634 |
| **அலகொன்றிற்கான பங்களிப்பு** | | **176** |

ஆண்டிற்கான உண்மைத் தகவல்கள் :

| | ரூ. |
|---|---|
| விற்பனை வருமானம் (80,070 அலகுகள்) | 64,536,420 |
| நேர் பொருட்கள் (398,500 கி.கிராம்) | 32,677,000 |
| நேர் கூலி (48,900 மணித்தியாலம்) | 10,758,000 |
| மாறும் மேந்தலைகள் | 7,237,200 |

- ஆண்டின்போது உண்மையான உற்பத்தி 80,070 அலகுகள்
- மாறும் மேந்தலைகள் நேர்கூலி மணித்தியால எண்ணிக்கை அடிப்படையில் தாக்கல் செய்யப்படுகிறது.
- 2017 மார்ச் 31 ல் முடிவடைந்த ஆண்டிற்காக பாதிடப்பட்ட உற்பத்தி மற்றும் விற்பனைக் கணியம் 80,000 அலகுகளாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக** :

(i) விற்பனை விலை முரண்

(ii) மாறும் மேந்தலை செலவின முரண் (Variable Overhead Expenditure Variance)

(iii) மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் (Variable Overhead Efficiency Variance)

(06 புள்ளிகள்)

(b) கீழ்வரும் மேலதிகத் தகவல்களையும் பயன்படுத்தி பாதிடப்பட்ட பங்களிப்பினை உண்மைப் பங்களிப் புடன் கணக்கிணக்கம் செய்யும் தொழிற்பாட்டுக் கூற்றினைத் **தயாரிக்குக** :

| உருப்படி | ரூ. | முரண் |
|---|---|---|
| நேர்பொருள் விலை முரண் | 797,000 | பாதகம் |
| நேர்பொருள் பாவனை முரண் | 148,000 | சாதகம் |
| நேர்கூலி வீத முரண் | 1,467,000 | சாதகம் |
| நேர் கூலி வினைத்திறன் முரண் | 214,500 | பாதகம் |
| விற்பனை கனவளவு எல்லை முரண் (Sales Volume Margin Variance) | 12,320 | சாதகம் |

(04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**வ/ப ரீசி கம்பனி** பிரிவு **A** மற்றும் பிரிவு **B** எனும் இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. பிரிவு **A** ஆனது தேயிலையினை தொகையாக ஏற்றுமதி செய்வதில் சிறப்புச்தேர்ச்சி பெற்றுள்ளதுடன் பிரிவு **B** புதிய தேயிலை சார்ந்த பொருட்களை உற்பத்திசெய்து விற்பனை செய்வதில் தேர்ச்சி பெற்றுள்ளது. 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டு தொடர்பில் இரு பிரிவுகளுக்குமான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| உருப்படி | பிரிவு A (ரூ.) | பிரிவு B (ரூ.) |
|---|---|---|
| வருமானம் | 78,000,000 | 144,625,000 |
| மொத்த இலாபம் | 9,711,000 | 38,079,763 |
| வட்டி மற்றும் வரிக்கு முன் இலாபம் | 2,558,400 | 6,497,000 |
| மொத்த மூலதனம் / தொழிற்படுத்திய சொத்துக்கள் | 31,200,000 | 44,500,000 |

பிரிவு **A** மற்றும் பிரிவு **B** முகாமையாளர்கள் உரிய பிரிவுகளின் செயற்பாடுகளின் (performance) அடிப்படையிலும் கம்பனியின் பிரதான நிறைவேற்று அலுவலர் (CEO) கம்பனியின் ஒட்டுமொத்த செயற்பாடுகளின் அடிப்படையிலும் வெகுமதி அளிக்கப்படுவர்.

செயற்பாடுகள் கீழ்வரும் இரு மட்டக்குறிகளின் அடிப்படையில் மதிப்பிடப்படும் :

(1) தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE) : 11.5%

(2) சொத்துப் புரள்வு விகிதம் : 2.8 தடவைகள்

**நீங்கள் செய்யவேண்டியவை :**

சான்றுபகரும் கணிப்பீடுகளுடன் பிரிவு **A** முகாமையாளர், பிரிவு **B** முகாமையாளர் மற்றும் கம்பனியின் CEO ஆகியோர் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு வெகுமதி பெறுவார்களா என **மதிப்பிடுக.**

(10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

இப்பகுதியிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

(A) நாட்டிற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை வழங்கும் சுற்றுலாத் தொழிற்படுத்துநரான **வ/ப இன்சயிட் கம்பனி** நியம மற்றும் டீலுக்ஸ் எனும் இரண்டு சுற்றுலாச் சேவைப் பொதிகளை வழங்குகின்றது. அடுத்த காலாண்டிற்கு கீழ்வரும் பாதீட்டுத் தகவல்கள் பிரித்தறியப்பட்டன :

| **உருப்படி** | | **நியமப் பொதி** | **டீலுக்ஸ் பொதி** |
|---|---|---|---|
| காலாண்டில் எதிர்பார்க்கப்படும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை | | 800 | 250 |
| ஒரு சுற்றுலாப் பயணிக்கான பொதியின் விலை | (ரூ.) | 125,000 | 350,000 |
| சுற்றுலாப் பயணி ஒருவருக்கான மாறும் கிரயம் : | | | |
| இருப்பிடம் | (ரூ.) | 62,500 | 195,000 |
| உணவும் குடிபானங்களும் | (ரூ.) | 28,000 | 46,500 |
| அனுமதிச் சீட்டுக்கள் | (ரூ.) | 10,000 | 18,000 |
| ஏனைய மாறும் கிரயங்கள் | (ரூ.) | 2,000 | 6,500 |

அடுத்த காலாண்டிற்கு பாதிடப்பட்ட மொத்த நிலையான கிரயம் ரூ. 32,510,400/-.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இணைந்த இலாப – கனவளவு வீதத்தினை (Combined Profit Volume Ratio) **கணிக்குக.**

(05 புள்ளிகள்)

(b) நியமப் பொதி மற்றும் டீலுக்ஸ் பொதி ஒவ்வொன்றினதும் சமப்பாட்டு மட்டங்களை (Break Even Levels) விற்பனைப் பெறுமதி மற்றும் விற்பனை அலகுகளில் வெவ்வேறாகக் **கணிக்குக.**

(07 புள்ளிகள்)

(B) **வ/ப கோல்டன் கம்பனியானது G1, G2** மற்றும் **G3** எனும் மூன்று பொருட்களை உற்பத்திசெய்து விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் அடுத்த மாதத்திற்கான பாதீட்டிலிருந்து பிரித்தறியப் பட்டன:

| | | **G1** | **G2** | **G3** |
|---|---|---|---|---|
| மாதாந்த கேள்வி (அலகுகள்) | | 10,000 | 9,000 | 6,000 |
| அலகொன்றுக்கான விற்பனை விலை | (ரூ.) | 580 | 850 | 1,500 |
| அலகொன்றுக்கான நேர் பொருட்கள் (கி.கிராம் ரூ. 60/- வீதம்) | (ரூ.) | 120 | 150 | 300 |
| அலகொன்றுக்கான நேர் கூலி (மணித்தியாலம் ரூ.250/- வீதம்) | (ரூ.) | 250 | 375 | 625 |
| அலகொன்றுக்கான மாறும் மேந்தலைகள் | (ரூ.) | 120 | 180 | 300 |
| மாதாந்த நிலையான மேந்தலைகள் | (ரூ.) | 1,425,000 | | |

அடுத்த மாதத்தில் கம்பனி நேர்பொருட்களில் மொத்தமாக 70,000 கி.கிராமை மாத்திரம் கொள்வனவு செய்ய முடியும். அத்துடன் அந்த மாதத்தில் கிடைக்கக்கூடிய உயர்ந்தபட்ச நேர் கூலி மணித்தியாலம் 39,000 மணித்தியாலங்கள் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) சான்றளிக்கும் கணிப்பீடுகளுடன் அடுத்த மாதத்தில் **கோல்டன் கம்பனியின்** உற்பத்தித் திட்டத்தில் வரையறைக் காரணிகளை (limiting factors) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) கிடைக்கப்பெறும் வளங்களின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையைக் (Optimal production mix) **கணிக்குக.** (06 புள்ளிகள்)

(c) உத்தம உற்பத்தி மட்டத்தில் மாதத்திற்கான இலாபத்தினைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) **வ/ப றெக்ஸ் கம்பனியின்** ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவானது, இப்போதைய தொழிற்சாலை இயல்வலுவைப் பயன்படுத்தி **RX1** மற்றும் **RX2** எனும் இரு பொருட்களை 2018 ஆம் ஆண்டில் விற்பனை செய்வதற்காக விருத்திசெய்துள்ளது. நிதிசார்ந்த மற்றும் ஏனைய வரையறைகள் காரணமாக கம்பனி ஒரு பொருளினை மாத்திரம் தயாரித்து விற்பனைக்கு விட எண்ணுகின்றது. இரு பொருட்களினதும் மதிப்பிடப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு :

**உற்பத்திப்பொருள் RX1 :**

| **ஆண்டு** | **வருடாந்தக் கேள்வி (அலகுகள்)** | **அலகொன்றின் விற்பனை விலை (ரூ.)** | **அலகொன்றின் மாறும் கிரயம் (ரூ.)** | **ஆண்டிற்கான நிலையான கிரயம் (ரூ.)** |
|---|---|---|---|---|
| 1 | 4,000 | 2,000 | 950 | 4,450,000 |
| 2 | 8,500 | 2,000 | 1,045 | 5,340,000 |
| 3 | 15,000 | 2,400 | 1,150 | 5,874,000 |
| 4 | 25,000 | 2,400 | 1,265 | 6,461,400 |
| 5 | 25,000 | 2,880 | 1,392 | 7,107,540 |

**உற்பத்திப்பொருள் RX2 :**

| **ஆண்டு** | **வருடாந்தக் கேள்வி (அலகுகள்)** | **அலகொன்றின் விற்பனை விலை (ரூ.)** | **அலகொன்றின் மாறும் கிரயம் (ரூ.)** | **ஆண்டிற்கான நிலையான கிரயம் (ரூ.)** |
|---|---|---|---|---|
| 1 | 20,000 | 400 | 180 | 3,250,000 |
| 2 | 50,000 | 448 | 198 | 3,575,000 |
| 3 | 55,000 | 502 | 218 | 3,932,500 |
| 4 | 60,000 | 563 | 240 | 4,325,750 |
| 5 | 60,000 | 631 | 264 | 4,758,325 |

**வ/ப றெக்ஸ் கம்பனியானது** பொருட்களுக்கான கேள்வியினை கண்டறிவதற்காக சந்தை ஆராய்ச்சியினை மேற்கொண்டதில் **RX1** மற்றும் **RX2** க்கு முறையே ரூ. 3 மில்லியன் மற்றும் ரூ. 4.5 மில்லியனை ஏற்கனவே செலவுசெய்துள்ளது. அத்துடன் பொருட்களை அறிமுகப்படுத்த முன்னர் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை ஊக்குவித்தலுக்காக **RX1** மற்றும் **RX2** ஒவ்வொன்றிற்கும் முறையே ரூ. 12 மில்லியன் மற்றும் ரூ. 9.5 மில்லியனை கம்பனி செலவு செய்யவேண்டியிருக்கும்.

கம்பனியின் மூலதனக் கிரயம் 15%.

*(வரியீட்டினைத் தவிர்க்குக.)*

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஆண்டு 0 முதல் ஆண்டு 5 வரையான காலங்களுக்கு ஒவ்வொரு பொருளுக்கும் நிகர காசுப்பாய்வுகளைத் **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) (i) ஒவ்வொரு பொருளுக்குமான நிகர இற்றைப் பெறுமதியினை (NPV) வெவ்வேறாகக் **கணிக்குக.** (07 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் பெற்ற விடைகளின் அடிப்படையில் எந்தப் பொருளை அறிமுகப்படுத்த வேண்டுமென்ற உமது பரிந்துரையைக் **கூறுக.** (01 புள்ளிகள்)

(B) விலை குறிக்கப்பட்ட பொதுக் கம்பனியான **பீட்டா PLC** யின் 2017 மார்ச் 31 ஆந் திகதியின்படியான நிதிநிலைக் கூற்றிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன :

| **உருப்படி** | **ரூ. ('000)** |
|---|---|
| சாதாரண பங்குகள் (200 மில்லியன் சாதாரண பங்குகள்) | 6,000,000 |
| கைக்கொள் இலாபம் | 1,200,000 |
| மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகுள் (80 மில்லியன் முன்னுரிமைப் பங்குகள்) | 800,000 |
| மீட்கப்படமுடியாத தனிச்சங்கள் (ஆண்டிற்கு 12.5% வட்டியுடைய 20 மில்லியன் தனிச்சங்கள்) | 2,000,000 |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) சாதாரண பங்கொன்றின் தற்போதைய சந்தை விலை ரூ. 45/-. பங்கொன்றிற்கு ரூ. 5.76 பங்கிலாபமாக செலுத்தப்படுகிறது.

(2) மீட்கப்படமுடியாத முன்னுரிமைப் பங்கொன்றின் தற்போதைய சந்தை விலை ரூ. 12.50. வருடாந்த பங்கிலாபம் முன்னுரிமைப் பங்கொன்றுக்கு ரூ. 1/-.

(3) தனிச்சமொன்றின் சமப் பெறுமதி ரூ. 100/-. தற்போதைய சந்தை விலை தனிச்சமொன்று ரூ.125/-.

கம்பனி 28% வரி செலுத்துகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) சாதாரண பங்கு மூலதனக் கிரயம் (02 புள்ளிகள்)

(b) முன்னுரிமைப் பங்கு மூலதனக் கிரயம் (02 புள்ளிகள்)

(c) தனிச்சக் கிரயம் (02 புள்ளிகள்)

(d) கம்பனியின் நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |